# தமிழ் வளர்ச்சிக் கழகம்
# செய்தி மின்மடல்

தனிச் சுற்றுக்கு மட்டும் 1:6 நவம்பர் 2025


## உங்களுடன்

வணக்கம்.



தமிழ் வளர்ச்சிக் கழக
அறங்காவல் குழுத் தலைவர்,
மேனாள் ஒன்றிய அமைச்சரின்
அறிவிப்பினை ஏற்று
ரூ. பத்து இலட்சம் வழங்கித்
தமிழ் வளர்ச்சிக் கழகப்
புரவலராகியிருக்கும்
அமெரிக்காவிலிருக்கும்
தமிழன்பர்
திரு. திருச்செங்கோடு
கந்தசாமி மாணிக்கம் அவர்களை நன்றியுடன்
பாராட்டுவோம்!
முன்மாதிரியாகக் கொடை வழங்கிய
அவரை நமக்கு அறிமுகம் செய்தவர்
ஆட்சிக்குழு உறுப்பினர்
திரு. இராசரத்தினம் இ.ஆ.ப. (ப.நி).
அவர்களுக்கு மிகவும் நன்றி.

தமிழ் வளர்ச்சிக் கழகமும்
சென்னைப் பல்கலைக்கழகத்
தமிழ் மொழித் துறையும் இணைந்து
விக்கிமூலம் வழி மாணவர்களும்
ஆசிரியர்களும் பயனுற
இணையத் தமிழ்ப் பயிலரங்கம்
நவம்பர் 21இல் நடத்தப்பெற்றது.
நிறைவு விழாவில் கலந்துகொண்டு
பயிற்சி பெற்றவர்களுக்கு வாழ்த்துரையும்
சான்றிதழ்களும் வழங்கிச் சிறப்பித்ததோடு
தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடர்ந்து பயணிக்க
ஊக்கம் தந்திருக்கும் தமிழ் வளர்ச்சிக் கழக
ஆட்சிக்குழு உறுப்பினரும்
சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளருமான
பேராசிரியர் முனைவர் ரீட்டா ஜான்
அவர்களுக்கு மிகவும் நன்றி!
தமிழ் மாணவர்களுக்குத்
தன்னம்பிக்கை உரை வழங்கிய
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர்
திரு ரெ. பாலகிருட்டிணன், இ.ஆ.ப.(ப.நி)
அவர்களும்
தமிழ் வளர்ச்சிக் கழகத்
திட்டங்கள் - பணிகள் குறித்து எடுத்துரைத்தத்
தமிழ் வளர்ச்சிக் கழக இயக்குநர்
முனைவர் ஔவை அருள் அவர்களும்
தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்
தொன்மையையும் தொடர்ச்சியையும்
விளக்கமுற எடுத்துக் கூறி
விழிப்புணர்வு வழங்கியதோடு
பயிலரங்கத்தின் பணிகளுக்குத்
தோள் கொடுத்துத் துணைநின்ற
தமிழ் மொழித்துறைத் தலைவர்
பேராசிரியர் ய. மணிகண்டன் அவர்களும்
பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

கட்டற்ற தமிழ் வளங்கள் -
கொள்கைகள் குறித்த அறிமுகமும்
விக்கிமூலம் திட்டம் அறிமுகமும்
தமிழ் நூல்கள் மெய்ப்புப் பார்த்தல் பயிற்சியும்
செயல்முறை விளக்கமும் தொழில்நுட்ப
நோக்கங்களும் குறித்துப் பயிற்சி அளித்த
திருவாளர்கள் நீச்சல்காரன் ராஜாராமன்,
ஸ்ரீ பாலசுப்ரமணியம், மு.சு. அருண்குமார்
பாராட்டுக்கு உரியவர்கள்!
ஆசிரியர்களும் மாணவர்களுமாக 38 பேர்
பயிற்சி பெற்றனர். செலவுகள் அனைத்தையும்
ஏற்றுக்கொண்ட விக்கிமீடியாவுக்கு நன்றி!

இனி
பயிற்சி பெற்றவர்களுடனும் சேர்ந்து
பணிகளைத் தொடர்வோம்!

அன்புடன்
ம.ரா.



# சொல் புதிது – 6

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் *சொல் புதிது* என்னும் திட்டத்தின் ஆறாவது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 15.10.25 முற்பகல் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பெற்ற சொற்கள் வருமாறு:

| வ.எண் | ஆங்கிலம் | தமிழ் | வ.எண் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|---|---|
| 1 | Stablecoin | நிலைமதிப்பு நாணயம் | 8 | Tongue cleaner | நாத் துலக்கி |
| 2 | Cockpit door | விமானக் காப்பறைக் கதவு; விமானிக் காப்பறைக் கதவு | 9 | War room | தீர்வுகாண் களம் |
| 3 | Stealth bomber | கரவுப் படை விமானம் | 10 | Zipline | சறுக்கு வடம் |
| 4 | Animal pass over | கால்நடைக் கடவை | 11 | Visual story | காட்சிக் கதை |
| 5 | Elephant corridor | யானை வழித் தடம் | 12 | Lockup death | காவல் சிறைச் சாவு |
| 6 | Hair spray | முடி தெளிப்பி | 13 | Glue stick | பசைக் குச்சி |
| 7 | Off campus | புற வளாகம் | | | |

# சொல் புதிது – 7

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் *சொல் புதிது* என்னும் திட்டத்தின் ஏழாவது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 19.11.25 முற்பகல் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பெற்ற சொற்கள் வருமாறு:

| வ.எண் | ஆங்கிலம் | தமிழ் | வ.எண் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|---|---|
| 1 | Brownfield project | தாளடித் திட்டம் | 14 | Raid Stroke Rsponse Team | பக்கவாத மருத்துவ விரைவுக்குழு |
| 2 | Greenfield project | முதலடித் திட்டம் | | | |
| 3 | Aironox | உடை மிடுக்கி | 15 | Fast Breeder Test Reactor | அணுமின் விரைவாக்க உலை |
| 4 | Aerofoot | காற்று நடைக் காலணி | | | |
| 5 | Invisacook | மறை அடுகலன் | 16 | Intraday trading | நாள் பங்கு வணிகம் |
| 6 | Water walking shoes | நீர்மிசைக் காலணி | 17 | Combo | சேர்க்கை |
| 7 | Grow bag | பயிர் வளர்ப்புப் பை | 18 | OTT | இணையப் படத் தளம் (இபத) |
| 8 | Air taxi / Flying taxi | வாடகை வானுந்து | 19 | White collar terrorism | அறிவுக் கயவர் பயங்கரவாதம்/ வன்முறை |
| 9 | Air car | வானுந்து | | | |
| 10 | Zeptosecond | நுண்ணொடி | 20 | Plastic surgeon | மெய்சீர் (அறுவை) மருத்துவர் |
| 11 | Wind farm / Wind park | காற்றாலைப் பண்ணை/ பூங்கா | | | |
| 12 | Cyber fraudster | இணைய மோசடிக்காரர் | 21 | Deep-sea mining | ஆழ்கடல் சுரங்கப்பணி |
| 13 | Global governance | புவி ஆளுகை | 22 | Digital connectivity | இணையத் தொடர்பு |

| வ.எண் | ஆங்கிலம் | தமிழ் | வ.எண் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|---|---|
| 23 | Digital infrastructure | இணையக் கட்டமைப்பு | 27 | Puffer Jacket | புடைப்பு மேலுடை |
| 24 | Assistive Technology | மாற்றுத் திறன் தொழில்நுட்பம் | 28 | Varsity Jacket / Letter-man Jacket | அடையாள மேலுடை |
| 25 | Down Jacket | இறகுபொதி மேலுடை | 29 | Hoodie Jacket | தொப்பி மேலுடை |
| 26 | Bomber Jacket | கவச மேலுடை | 30 | Legging | காலொட்டு உடை |

# உரைச் சொற்பொருள் களஞ்சியம்

*தமிழ்ப் புலமை நெடும்பரப்பைக் கட்டமைப்பதில் இலக்கியங்கள், இலக்கணங்கள் ஆகியவற்றுக்கு நிகராக அவற்றின் உரைகளும் இன்றியமையாப் பங்காற்றுகின்றன. உரைகளைத் தனிப் பனுவலாக அடையாளப்படுத்தும் சிந்தனை ஓட்டத்தின் வெளிப்பாடாகவே இளம்பூரணர் உரை இளம்பூரணம் என்றும் சேனாவரையர் உரை சேனாவரையம் என்றும் குறிப்பிடப்பெறுகின்றன.*

*இறையனார் அகப்பொருள் உரை முதலாக கி.பி. 13, 14ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்டுள்ள நச்சினார்க்கினியர், பேராசிரியர் உரை வரையிலான உரைகள் மாபெரும் அறிவுச் செல்வங்களாகத் திகழ்கின்றன. தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், வீரசோழியம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்களுக்கும் புறநானூறு, பரிபாடல், திருமுருகாற்றுப் படை, சிலப்பதிகாரம் ஆகிய இலக்கிய நூல்களுக்கும் எழுதப்பட்டுள்ள பழைய உரைகள் இன்றும் வழக்கிலுள்ளன. இந்த உரைகளில், உரையாசிரியர்கள் மூலநூலுக்கு ஏற்ற அறிவைப் பதிவிட்டுள்ளனர். அந்தப் பதிவு, மூலநூல் சொல்லுக்கு ஒற்றைச் சொல்லில் பொருளளிப்பதாகவும்; விரிவாகவும் செறிவாகவும் பொருள் விளக்கம் அளிப்பதாகவும் இருநிலைகளில் அமைந்துள்ளது. சில நேரங்களில் மூல நூலில் இடம்பெற்றுள்ள தமிழ்ச் சொல்லுக்குத் தம் காலத்தைச் சேர்ந்த மற்றொரு மொழியின் கலைச்சொல்லை அளிப்பதாகவும் அமைந்துள்ளது.*

**பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும் சொல்லி னாகும் என்மனார் புலவர் (சொல். பெயரியல், 2)** *என்னும் நூற்பாவழித் தொல்காப்பியம், பொருண்மையையும் சொன்மையையும் ஒரு சொல் உணர்த்த வல்லது என்கிறது. இந்நூற்பாவிற்கு உரை வரைந்த தெய்வச்சிலையார்,* **நிலம் என்பது பொருளின் தன்மை ஆராய்வார்க்கு மண்ணினான் இயன்றதோர் பூதம் என்றாயிற்று. சொல்லின் தன்மை ஆராய்வார்க்குப் பெயர்ச்சொல்லாயிற்று. அகனான் இருபகுதிய சொல் நிலைமை** *எனத் தொல்காப்பியக் கருத்தைத் தெளிவுபடுத்துகிறார்.*

*உரைகளில் சொற்குரிய அகராதிப் பொருளும் (பொருண்மையும்) (*lexical meaning*), இலக்கணப் பொருளும் (சொன்மையும்) (*grammatical meaning*) இடம்பெற்றுள்ளன.*

**எடுத்துக்காட்டுகள்:**

**பொருண்மை அல்லது அகராதிப்பொருள்** (lexical meaning):

**நிலம் – மண்ணினான் இயன்றதோர் பூதம்**

**சொன்மை அல்லது இலக்கணப்பொருள்** (grammatical meaning):

**நிலம் – பெயர்ச்சொல்**

*உரைகளில் அமைந்துள்ள மேற்சுட்டிய இரு வகைப் பொருள்களையும் உள்ளடக்கி அமையும்* **உரைச் சொற்பொருள் களஞ்சியம்** *என்னும் இத்திட்டம் முதல் முயற்சி; முன்னோடி முயற்சி ஆகும்.*

*புது தில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் இரா. அறவேந்தன் அவர்கள் இத்திட்டத்தைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு அளித்துள்ளார்.*



*இத்திட்டத்தின் முதன்மை நோக்கங்களாவன:*

1. *தமிழ் இலக்கண, இலக்கியங்களில் பயின்று வரும் சொற்களின் பொருள் வளம் அறிய உதவும் நோக்கு நூலாய் அமைதல்.*

2. *தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றறியத் துணைபுரிதல்.*
3. *பயனாளிகளின் மொழி வளத்தையும் சிந்தனை வளத்தையும் மேலும் மேம்படுத்தத் துணைநிற்றல்.*
4. *சொல் உணர்த்தும் பொருளையும் கருத்தியலையும் வரையறுக்கும் திறனை வளர்த்தல்.*
5. *வெற்றுச் சொல் விரவாது செறிவாக எழுதும் ஆற்றலை வளர்த்தெடுத்தல்.*

*மாதிரிப்பதிவுகள்*

**அழிபசி**

அறிவு முதலியன அழிதற்குக் காரணமான பசி (சிறு.140, நச்.)

**அளவை**

நிறுத்தளத்தல், 2. பெய்தளத்தல், 3. சார்த்தியளத்தல், 4. நீட்டியளத்தல், 5. தெறித்தளத்தல், 6. தேங்கமுகந்தளத்தல், 7. எண்ணியளத்தல் (தொல். எழுத்.7, நச்.).

**அன்பு**

தான் வேண்டப்பட்ட பொருளின்கண் தோன்றும் உள்ள நிகழ்ச்சி (இறை.1, நக்.); அருட்கு முதலாகி மனத்தின் நிகழும் நேயம் (தொல். பொருள். 260, பேரா.).

**இறுமாத்தல்**

தாழாத உள்ளத்தராய்ச் செம்மாத்தல் (திருக்கோ. 242, பேரா.).

**சுத்தி**

கபாலத்தால் இப்பி வடிவாகச் செய்யப்பெற்ற திருநீற்றுச் சம்புடம் (திருக்கோ. 242, பேரா.).

**தானம்**

அறநெறியான் வந்த பொருளைத் தக்கார்க்கு உவகையுடன் அளித்தல் (குறள்.19, பரிமே.).

**பொருட்பெண்டிர்**

கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொதுமகளிர் (குறள்.193, பரிமே.); பொருளே கருதும் பெண்டிர் (குறள்.193, மணக்.).

**மானம்**

எஞ்ஞான்றும் தன் நிலையில் தாழாமையும் தெய்வத்தால் வந்துழி உயிர் வாழாமையும் (குறள்.97, பரிமே.).

**முற்று**

தாமே தொடராதற்கு ஏற்கும் வினைச்சொல் (தொல்.சொல்.235, சேனா.)

**மையாத்தி**

ஒவ்வாதவற்றை ஒக்கும் எனக் கோடல் (குறள்.1112, பரிமே.).

**வறுமை**

போகம் துய்க்கப்பெறாத பற்றுள்ளம் (தொல். பொருள். 253, பேரா.).

## ஈரோடு தமிழன்பன் 28.09.1933 - 22.11.2025

அஞ்சலி



சாகித்திய அகாதெமி விருது (2004),
கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது (2018),
உலகத் தமிழ்ப் பீட விருது (2021)
உள்ளிட்ட பற்பல விருதுகளைப் பெற்றவரும்
மகாகவி எனப் போற்றப்பெறுபவரும்
முதுபெருந்தமிழ்க் கவிஞருமான
ஈரோடு தமிழன்பன் அவர்களது மறைவுக்குத்
தமிழ் வளர்ச்சிக் கழகம்
ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

## நூல் விற்பனை (50% கழிவுடன்)

தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள அனைத்து நூல்களும் 50% சிறப்புக் கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன.

தொடர்புக்கு:
**தமிழ் வளர்ச்சிக் கழகம்**
**மணிக்கூண்டுக் கட்டடம், சென்னைப் பல்கலைக்கழக வளாகம், சேப்பாக்கம், சென்னை 600 005**
**தொலைபேசி: 044-25365440 இணைய வலைத்தளம்: www.tamilvk.org**
**மின்னஞ்சல்: tamilvalarchikazhagam2024@gmail.com**